

பிரமண தெரு
கமலாம்பிகை
சரிதம்
( 15.09.1938 - 06.04.2009 )

# பிராமண தெரு
# கமலாம்பிகை
# சரிதம்

பா.இரகுவரன்

தேடல் வெளியீடு~ 05

# Piramana Theru
# Kamalambhi
# Saritham

---

**A Social Document connected With Thumpalai West, Brahmin Street .**

**V.B.Raguvaren**
**(Sc .Spe. Trd, B.A (Hons)**
**Special in Drama & Theatre)**

**Brahmin Street,**
**Thumpalai,**
**Point Pedro.**

**First Edition - 2009.05.06**

**Printers - New S.P.M V.M Road**

**Cover Design -Thiru Studio**

## உணர்வின் அடித்தளத்தில் நின்று
## உணர்ச்சிகளுக்கு அப்பாற்பட்ட
## உண்மை வரலாற்றின் அறிகையை நோக்கி........

சமூக வரலாற்றுப் பதிவு என்பது மிகவும் பெறுமதி வாய்ந்தது. நூல்கள் மூலம் அறியமுடியாத பல விடயங்களை சமூகத்தில் வாழும் முதியோர்களின் அனுபவ அறிவின் பதிவிலிருந்து பெற்றுக்கொள்ளுதலும், பதிவு செய்து சமூகத்துக்கே கொடுத்தலும் என்பது மிகவும் கணிப்புக்குரிய விடயமாகும்.

சமூகவரலாற்றைப்பற்றி முதியோர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் போது, சமூக பொருளாதார , அரசியல், புவியியல், அன்னியரின் ஆதிக்கம், சாதி, மத, இனம், உணவு, உடை, பேச்சுவழக்கு, சிந்தனை ........ எனப்பலதரப்பட்ட விடயங்களை ஒன்றிணைந்த பண்பாட்டு காரணிகளை முன்வைத்து அதில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி எழுதும் அறிவுப் பின்புலம் கொண்டிருக்க வேண்டும்.

ஆயினும் இந்நூலில் பிராமண தெரு பற்றி என்னால் அறியப்பட்ட சில விடயங்களைக் கொடுத்திருக்கிறேனே அன்றி பண்பாட்டு மாற்றத்தின் வழியான சமூகப் பார்வையுடன் பதிந்து கொள்வதற்குப் போதிய ஆளணிகளைத் தவறவிட்டு விட்டேன். காலங்கடந்த ஞானம் கௌவைக்கும் உதவாது.

Some thing is better than nothing ( ஒன்றும் இல்லாது இருப்பதை விட சிறிதளவாவது இருப்பது மிகச் சிறந்தது) என்பதற்கிணங்கவே இச்சிறு நூலில் ஆவணப்பதிவுகளைச் செய்துள்ளேன்.

சமூக வரலாற்றை நாம் ஒரு புகழ்ச்சிக்கேடயமாக பாவிக்கும் நிலை மாற்றப்பட வேண்டும். “எங்கள் தாத்தாவிடம் பெரியதொரு கொம்பன் யானை இருந்தது” என்று கூறிமகிழ்தலில் பயனேதும் இல்லை. இப்போது என்னிடம் என்ன உள்ளது என்ற கேள்விக்கு முன்னரை விட மேம்பட்ட விடை அளிக்கக்கூடிய கொதி நிலையில் நாம் இருக்க வேண்டும். சரி இவை ஒரு புறம் இருக்க.....

இப்பொழுதெல்லாம் எமது வரலாற்றாய்வாளர்கள் பலர் ஒரு முடிவை ஏற்கனவே எடுத்துவிட்டு அந்த முடிவுக்கு சார்பாக வரலாற்றாதாரங்களை உணர்ச்சி நிலை நின்று பயன்படுத்த முயலுகிறார்கள் . இனம், சாதி, மதம், பிரதேசம் என்ற உணர்ச்சி

நிலைக்கு அப்பாற்பட்டு, வரலாறு என்னும் உணர்வு நிலை நின்ற ஆய்வுகளும், கட்டுரைகளுமே ஒரு சமூகத்தை ஆரோக்கிய நிலைக்கு எடுத்துச்செல்லும். பாருங்கள் இந்நூலின் முன்புற அட்டைப்படத்தில் எனது தாயார் பிறந்து வளர்ந்த வீட்டின் முன் விறாந்தைப் பகுதியை பதிவுசெய்துள்ளேன். இது 1956ல் எடுத்த புகைப்படம் அவ்வேளை நான் பிறக்கவில்லை. ஆயினும் எனது சிறு பராயத்தில் உயர்ந்த திண்ணை, அழகிய வேலைப்பாட்டு முனை கொண்ட மரக்கப்புகள், பெரிய முன் கதவுப்பகுதி வரை செல்லும் வாய்க்கால் போல் அமைந்த நடைபாதை கொண்ட அமைப்பை இடித்து விட்டு, நவீன மயப்படுத்தல் என்ற பெயரில் கொங்கிறீற் தூண்களும், 'பிளேற்'களுடனுமான ஓரளவு கவர்ச்சிகரமாக வீட்டின் முன்புறத்தை ஆக்கிவிட்டோம்.

இப்பொழுது தான் தெரிகிறது நாங்கள் பெரும் வரலாற்றுத்தவறை இழைத்து விட்டோம் என. இதை விட பிராமண வீதி அச்சுக் கூடத்தடி வீடுகள் 70-100 அடி வரையிலான நீளம் கொண்டன. தெருவால் போக்குவரத்துச் செய்வோர் நீண்ட இத்திண்ணையில் இளைப்பாறலாம், இராப்பொழுதைக் கழிக்கலாம். பிராமண வீடுகளுக்கு வருவோரை உள்ளே போகாமல் வெளியில் இருந்தே கதைத்து விட்டு அனுப்பிவிடலாம்........... மொத்தத்தில் அந்த நில உடைமை சமூக அமைப்பு முறையைப்பேண இந்த திண்ணை வீடுகள் பயன்பட்டதுமன்றி, மற்றவர்களுக்கும் உபயோகமானதொன்றாக இருந்துள்ளது.

மின்சார விளக்கு அறிமுகத்துக்கு வராத அக்கால கட்டத்தில் சுவரில் அமைத்த விளக்கு மாடங்கள் மக்களின் போக்குவரத்துக்கும் உதவியுள்ளன. இருளின் பயப்பிராந்தியைப் போக்கடித்துள்ளன.

2001ம் ஆண்டு தும்பளைக்கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணமாக **"ஊரும் வாழ்வும்"** என்ற நூலை வெளியிட்ட போது அட்டைப்படமாக பழம்பெருமை மிக்க பிராமண தெருவில் **"கலாநிதி யந்திர சாலை"** என்ற அச்சகத்தின் முன்புற அமைப்பை ஓவியர் ரமணியின் மூலம் கோட்டுப்படமாகக்கீறி வெளியிட்டிருந்தேன்.

அதிஸ்டவசமாய் அந்நேரத்தில் எடுத்த புகைப்படம் இன்று பின் அட்டையை அலங்கரிக்க உதவியுள்ளது. துரதிஸ்டம் என்னவென்றால் **"கலாநிதி யந்திர சாலை"** என எழுதப்பட்ட அந்த மேல் குறுக்குப்புற கட்டடப்பகுதி இன்று இல்லை. இடிந்து விழுந்து விட்டது. இந்தக் கட்டிடத்தை காப்பாற்ற வேண்டும் என்ற சமூக வரலாற்று உணர்வு இன்றியே இருந்து விட்டேன். எனது




தவறு மன்னிக்க முடியாத தொன்று.

இப்படி எத்தனையோ விடயங்களை நாம் இழந்து விட்டோம். ஊத்துமரம் (நல்லெண்ணெய் தயாரிப்பு) சங்கடப்படலை என்பவற்றை எமது ஊரில் மருந்துக்கும் காண முடியாது போய்விட்டது. எதிர்கால சந்ததிக்கென நாம் எதைக்கொடுத்துள்ளோம்........ சரி போனது போகட்டும். இனியாவது தவறுகள் நடைபெறாமல் இருக்க எமது ஊரின் அறிவும் ஆற்றலும், கொண்ட இளைஞர் அணி தகுந்த முன்னெடுப்புக்களைச் செய்யவேண்டும். செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன், தனிமரம் தோப்பாகாது என்று கூறிக்கொள்ளும்.

**பா.இரகுவரன்.**

# தும்பளை மேற்கு கிராமம்

( பருமட்டான வரைபடம் )




iv

குறிப்பு 1) பிராமண வீதியின் C,D பகுதி பெருவெட்டி தெருவின் ஒரு அங்கமாக உள்ளது

2) பிராமண வீதியில் அச்சுக்கூடம் இருந்த வீதி, கலாநிதி யந்திர சாலை வீதி என்றும், அச்சுக்கூட வீதி என்றும் அக்காலத்தில் அழைக்கப்பட்டுள்ளது.

3) அரசடி வீதி 2001 ம் ஆண்டு வாக்காளர் இடாப்பின்படி H என்ற இடத்தில் முடிவடைவதாக உள்ளது

4) S,R,$Q_1$ வாக்காளர் இடாப்பின்படி கொட்டைகலட்டி ஒழுங்கை என்ற பெயரில் உள்ளது

5) X, H ,I, J, K - வரதவிநாயகர் கோயில் வீதியாகும்

6) $P_1$, B ,C ,D ,E - பெருவெட்டி தெருவாகும்

7) $A_1 A_2 A_3$ - அம்புலி ஓடை ஒழு

8) $T_1 T_2 T_3$ - திதிரி ஒழு.


9) $S_1$ $S_2$ $S_3$ கோவில் ஒழுங்கை

10) $V_1 V_2$ - வண்ணான் கலட்டி ஒழு

# தும்பளை மேற்கு கலட்டி

**பிராமணக் குடியிருப்புகள், காணிகள் இருந்த இடங்கள்**

**(முன்னையது)**






- $P_1$ - விளாத்திக்காணி
- $P_2$ - வைத்தியநாதக்குருக்கள் வீடு
- $P_3$ - கோயில், துரைஐயரின் காணி
- $P_4$ - துரைஐயர் வீடு
- $P_5$ - சுந்தரம்மா வீடு
- $P_6$ - சுப்பிரமணிஐயர் வீடு
- $P_7$ - பூபதி ஐயர் வீடு
- $P_8$ - ஏகாம்பர ஐயர் வீடு
- $P_9$ - தம்பையர் வீடு
- $P_{10}$ - முத்துச்சாமி குருக்கள் வீடு
- $P_{11}$ - நண்டையர் வீடு
- $P_{12}$ - யோகையர் வீடு
- $P_{13}$ - சுப்பிரமணியசாஸ்திரிகள் வீடு
- $P_{14}$ - சோமசுந்தர ஐயர் வீடு
- $P_{15}$ - ஆலாசிஐயர் வீடு
- $P_{16}$ - சண்முகரத்தின சர்மா வீடு
- $P_{17}$ - அச்சுக்கூட காணி
- $P_{18}$ - அச்சுக்கூடம்
- $P_{19}$ -ஏகாம்பர ஐயர் வீடு
- $P_{20}$ - சண்முகரத்தின சர்மா வீடு
- $P_{21}$ - பிராமணர் காணி
- $P_{22}$ - மாதவையர் வீடு
- $P_{23}$ - சீனி ஐயர் வீடு
- $P_{24}$ - பிராமணக் காணி

## உள்ளே............

1. கமலாம்பிகை சரிதம் 1 - 8

2. பிராமணதெருவும் அதனோடு
தொடர்பான விடயங்களும் 9 - 28

3. பிண்ணிணைப்பு -1
சைவக்குடும்பங்கள் 29 - 36

4. பிண்ணிணைப்பு -2
அமரர் நடராசா கணேஸ்வரன் 37 - 38

## பிராமண தெரு

# கமலாம்பிகை சரிதம்

1 முதல் வணக்கம் உந்தனுக்கே
மூன்று முறை குட்டலிட்டேன் சிரமதனில்.
கசிந்துருகி இதயத்தை நின் சேவடியில்வைத்தே
கண்ணீரால் அபிசேகம் செய்தேன்.
விண்ணகம் ஏகிவிட்ட எனைப்பெற்ற
பெண்ணரசி,மகராசிதன் வாழ்வதனை
வரலாறாய் பாடிடவே - என்னுள்
வந்துறைவாய் ஞானகணபதியே!

2 சீரோங்கித் தமிழ்மணக்கும் யாழ்ப்பாணம்தனில்
பேரோங்கித் திகழ்ந்திருக்கும் துறைமுகம்கொண்ட
பருத்திமாநகரின் அடுத்துள்ள
மருத்துவரும்,சோதிடரும்,வன்னிவணிகரும்
கருத்துடனே அறிவு கொண்ட பேராசான்கள்,
பெருத்த மேதாவிகளின்
உருத்துடை ஊராம் தும்பளை மேற்கினில்:
எந்தையும்,தாயும்,நானும்
தத்தித்தவழ்ந்தும், இருந்தும்,நடந்தும் வீழ்ந்தும்
சுத்தித்திரிந்தும், அ(னா) எழுதிப்புத்திபெற்ற
கலட்டியூரின்
கனகமணி மண்ணே!
சிரம்தாழ்த்தி வணங்குகிறேன்
சிறியன் பிழைகள் பொறுத்திடுவாய்.

3 அந்தணர் என்னும் அறவோர்கள்
சுந்தரமாய் வாழ்ந்து புகழ்பெற்ற
பிராமண தெருவில்

கணபதிப்பிள்ளை தந்தையுமாய்
சின்னப்பிள்ளை தாயுமாய் கூடிக்கலந்து
பெற்றெடுத்தார் எங்கள் கமலாம்பிகையெனும்
பொற் தாமரை தனையே (1938)

4 தாயின் வயிற்றில் தவழ்ந்தபோதே
நோயது முற்றி முடிந்த காரணத்தால்,
தந்தை முகம் கண்டறியாப் பாவி இவள்.
அன்னையுடன், அக்காவும், அண்ணாவும்
அன்பினில் குழைத்த மூச்சுக்காற்றால்
வளர்ந்தனள் எங்கள் ஏந்திளையாள்.

5 அக்காளும் இறந்துவிட
அண்ணன் விநாயகம்பிள்ளை
அன்புத் தங்கை இவள் மீது கொண்ட
அன்புக்கோர் அளவில்லை.
அண்ணா என்றால் போதும் இவள் நெஞ்சில்
பாலூறும்,தேனூறும்,தெய்வீக அமுதூறும்.

6 ஆரம்பக்கல்வி - எங்கள்
சிவப்பிரகாச மகாவித்தியாசாலை தன்னில்
இடைநிலைக்கல்வி வடஇந்துமகளிர்கல்லூரியில்
கல்வியுடன் பேச்சு, பாட்டு, விளையாட்டுகளில்
வல்லவள் - ஆங்கிலத்தில்
நல்ல சரள நடை பெற்றவள்.

7 மூக்கு நுனியில் முற்கோபம்
மூக்குத்தியாய் ஜொலிக்கும்.
நாக்கு நுனியில் வஞ்சமில்லை
தீய நெஞ்சமில்லை
பொல்லாத வாய்க்காரி,
பொடு பொடுத்த குணக்காரி,
பொன்னான இதயக்காரி,



போலியாய் வாழ்ந்ததில்லை.

8 தும்பளை மேற்கு ஒல்லை வளவு
வைத்திலிங்கம் இராசம்மா தம்பதியரின்
இரண்டாவது மகன் பாலகிருஷ்ணனுக்கு
மாலையிட்டே மகிழ்ந்து
சூடினள் பொற்தாலிதனையே (1958)
கூடியே மலர்ந்தனள் தாயாய்.
வயிறு கீறிக் கிழித்து - இணுவிலில்
மகன்தனைப் பெற்றெடுத்தனளே (1959)

9 மீண்டும் இவள் கும்பி கிழித்து
பிறந்தனள் (1961)
சுகந்தமலரென்னும் பொன்மலராள்.
மிகுந்த நாட்கள் 21 வாழ்ந்தது போதுமென்று
கருங்கிரந்தி நோயுடன்
கலந்தனள் ககனவெளியில் - எங்கள்
செல்லக் கண்மணியாள்

10 தனித்த மகனில் தன் உயிரை வைத்து
கனிந்த அன்பைப் பொழிந்து பொழிந்து
சொல்லெடுத்துப் கசிந்துருகிப்பாடுவாள் பாடல் பல.
“வல்லமை பேசும் நல்லவனாக
வாழ்ந்தாலே போதுமடா”..........
வளர்த்தனள் தன் உயிர்மூச்சை இறைத்திறைத்து
வார்த்து வார்த்தே

11 அம்மையே இன்னொன்று உரைப்பேன் கேள்!
அப்பருடன் குடும்ப வாழ்வு
கடுகளவும் இனிக்கவில்லை இளமையில்
யாரின் குணக்கேடு காரணம் என்று
யான் பாடுதல் அழகில்லை.
பின்னாளில் முதுமையில் ஒப்பில்லா
அன்பினால் இருவரும் கட்டுண்டீர்
பொறாமை கொண்டனன் மைந்தன் என்றே
கூறிடல் சற்றே லச்சை தான்.

12 அம்புலிமாமாவும், சித்திரக்கதைகளும்
கல்கியும், கலைமகளும்
கலைக்கதிரும், மஞ்சரியும்
மலைக்க வைக்கும் சிறுவர்கதைகளும்
தந்தையுடன் கலந்து பேசி
வாங்கிக் கொடுத்தே - அவனை
வாசிப்பில் நேசிக்கவைத்தாய்
தனித்தவன் தான், ஆயினும் நூல்களால்
தனிமை கண்டதில்லை என்றும்!

13 வாசிப்பால் பெறுகிறான்
நேசிக்கும் அறிவு நிறை நண்பர் குழாமினை;
வாசிப்பால் மைந்தன் வாழ்வினை;
வழிநடத்தி செழிக்க வைத்த- அன்னாய்!
உடற்கூட்டில் இருந்து அவன் ;
உயிர் பிரியும்வரை உனை மறத்தலும் முடியுமோ.
கண்ணீர் பெருகி இவ்வரிகளை எழுதுகின்றேன்.
கண்டால் உன் நெஞ்சில் உதிரம் கொட்டுமம்மா!
தாயே - உந்தனுக்கு;
நன்றிகள் எத்தனை கோடிகள்;
கூறினும் போதாதே! என் செய்வான் பாவி அவன்!

14 உந்தன் உடமைகள் அத்தனையும்
எங்கள் ஊரில் நலிந்தகுடும்ப நங்கைக்கே என
எண்ணிய நெஞ்சுடன்
திண்ணிய செயலால்
புண்ணியர் கணேசமூர்த்தி ஸ்ரீமதிலீலாவின்
செவ்வந்திப்பூவினள் ரஞ்சிதாவை
மைந்தன் கைத்தலம் பற்றி
களித்திட வைத்து
கண்டு கண்டு மகிழ்ந்தாய்!



15 கண்ணின் மணிகள் இரண்டு உந்தனுக்காய்
மண்ணுலகம் வந்தனர்
பேர்த்தி ஜலனியும்(1996)
பேரன் கிருஸ்ஷானும்(1999)
அலை கடல் போல் ஆர்ப்பரித்து
அளவிலா மகிழ்ச்சி கொண்ட வேளை.........
மாண்டிட வீழ்ந்தார் படுக்கையில் நின் கொழுநன்
தாண்டினார் இவ்வுலகப் பிறப்பறுத்து
வேண்டியபடி சிவலோகம் சேர்ந்தார். (1999)

16 பூப்படைந்த (2007) பேர்த்தியின்
பூப்பனித நீராட்டை கொண்டாடினாய்
திருவிழாவாய்(2008)தீர்த்தக்கரைபோல் சனக்கூட்டம்
இதுவே போதும் என்று குதுகலித்தாய்
இனிக்கன காலம்
இருக்கமாட்டேன் என்றே பலதரம் பகர்ந்தாய்.

17 2009ன் தைபிறந்து மறுநாள் (16.01.2009)
ஸ்ரீமதிலீலா உன் சம்பந்தி,மைத்துனி
திடுக்கிட வைத்து கடுந்துயர்தந்து
வெடுக்கென்று ஏகினள் இறைபதம்.
ஆற்றாமல் அழுதுபுரண்டாய் - பின்பு
தோற்றாய் உன் நோயிடம்
படுக்கையில் வீழ்ந்தாய் (12.02.2009)
இடுக்கண்பட்டு இழுபட்டாய் 54 நாட்கள்
தடுத்திடும் நின் மைந்தன் தவித்திடுவான் என்றே!

(குறிப்பு- இச்சரிதம் எழுதும் காலமதில்அமரர் திருமதி கமலாம்பிகையின் சம்பந்தி அமரர் ஸ்ரீமதிலீலா வின் கணவர் நா.கணேசமூர்த்தி வவுனியாவில் 20.04.2009 ல் சிவபதம் எய்தி விட்டார்)

18 அருமையாய் நேசித்த பெறாமக்கள்-உன் அருமை
அருந்தவராசாவும், வரதாம்பிகையோடு
கணவர் கமலநாதனும்,சுதர்சனும் விமலாவொடு
கணவர் ஆறுமுகமும்,நித்தம் வரும் நிமலாவும்
கலாநிதி சிவபாலனுடன் கலாநிதி அமிர்தாஞ்சலியும்
கலாநிதி சிவயோகனும்,
சிவநேசனொடு தந்தை திருவிளங்கமும்,
சிவகுமாரன்(அமரர்)தன் உற்றாள் சேதுபதியும்,
தேவாவும் குணராஜனும்
உரிமையாய் வந்தனர் அடிக்கடி
உனைப் பார்த்திடவே.

19 பெருமையாய் நீ பேசும் மருமக்கள்
விலோசனாவுடன் கணவர் பஞ்சாட்சரமும்
ரஞ்சினியுடன், கௌரி பாலாவும்
ராகினியொடு பாலகெங்காதரமும்
குணசீலன்,இந்திரா,திருமணி, யோகநாதனும்
தினம் தினம் வந்தனர் உன்நிலை காணவே
தொலைபேசியில் நளினியொடு அருண்மொழியும்
இந்துமதியோடு தேவராசாவும் - உன்
நிலையறிந்து வருந்தினரே.

20 உந்தன் கணவரின் அன்பான
சொந்தத்தங்கை புவனேஸ்வரி மாமி
இடுப்பொடிந்து பாயில் படுத்தனள்; கெடுகாலம்.
மிடுக்கான மாமியின் மக்களாம்
கோபி(காந்தரூபன்)யுடன் உற்றாள் ஜெயந்தியும்
பரா(சந்திரவதனா)வுடன் கணவர் யோகராசாவும்
சிவானி(தயாளகாந்தன்)யுடன்
மனையாள் செல்வகுலேஸ்வரியும்
வந்து போயினர் மாமியுனைப்பார்த்திடவே



21 பாசத்தால் பரிவுடன் உனை அணைத்த
பக்கத்துவீட்டு மச்சாள் சின்னம்மாவும்(சிவபாக்கியம்)
தித்தித்த உறவுகொண்ட விலோமாமியும்(கமலாவதி)
காந்தக்கா அன்புநிறைமைத்துனியும்(கமலாவதி)
சொந்த மச்சாள் ராஜேஸ்வரி மாமியும்
முன்வீட்டுப்பாக்கியக்காவும்,சிவஞானசுந்தரம் sir ம்
தவமனி மச்சாளும். நிதர்சனும்
வந்துபார்க்கையிலே நீ அழுதகுரல் கேட்டு
உள்ளம் வெதும்பி நின்றனரே.

22 கனடாவில் வாழும் உந்தன் சரோயினி அக்காவும்
தனது நினைவாய் விரும்பிய பொருள் வாங்கு
எனக்கொடுத்த காசில் dressing table ,T.V stand
நினைவாய் நிக்குது பார் எம் வீட்டில் - அவ்
தொலைபேசியில் தொடர்பு கொண்ட வேளை
அலையிளந்த கடல்போல
சரீரம் ஒடுங்கி சாரீரம் இழந்துவிட்டாய்.
குலைத்திடுமோ இதயத்தால் இருவரும்
வலைப்பின்னலாய் இணைந்திட்ட அன்பு

23 ராணி மாமியோடு கணவர் இராசேந்திரமும்
மணி மாமியொடு பிரபா குடும்பமும்
பிரேமாவும் ஸ்ரீரங்கநாதனும் நேசமுடன் வந்து
மருத்துவ தாதியாய் பராமரித்தனர் உனையம்மா.

24 அறிவித்தாலும் இல்லாவிட்டாலும் உருத்துடன்வந்து
அருகில் இருந்து வைத்தியம் பார்த்த
டொக்ரர் சுந்தரமூர்த்தியும்
இந்திராவும்,சந்திராவும் மற்றுமுழ சகோதரிகளும்
விஞ்ஞான ஆசிரியர் அண்ணன் ஆனந்தலிங்கமும்
வந்தனர்,வாடி நின்றனர்
உன்நிலை கண்டு கண்டே.

25 இப்படியாய் நகர்ந்தன நாட்கள்-பள்ளியில்
எப்படிப் படிப்பிப்பான் தாயே
வாசற் படியில் முச்சூலன் யமன்
வந்துனை வாவென்று அழைக்கையிலே
பள்ளிக்கூடம் தனை மறந்தான் - உன் மைந்தன்
படுக்கையிலே தானிருந்தான் உன் கூடவே
எத்தனை ஜென்மம் எடுத்தாலும் - ராசா நீ யென்
பிள்ளையாய் பிறந்திட வேண்டுமென்றாய்.
பூ மகள் நின் சான்றிதழ்
பெற்றிடவே என்ன புண்ணியம் செய்தனன் அவன்
அம்மா ஏகிடப் போகுதியோ எனை என்றால்
அமுத விழி நீர்சுரக்க
படுத்திருப்பாய் பட்டமரம் போல

26 பிரிய மனமின்றி பிடித்து வைத்த நின்னுயிரை
கரிய நிறத்து காடையன் யமன்
பறித்துக் கொண்டு ஓடினானே ஓட்டம்(06.04.2009)
பிறகென்ன
ஒப்பாரிகள் ஓலங்கள்,பறைமேளங்கள்,தாளங்கள்
உறவுகள் சூழ்ந்துனை
உருகி அழுதழுது அனுப்பி வைத்தனர்

எல்லா சடங்குகளும் நடந்தன, முடிந்தன
நல்லாய் - நீ இல்லாத நானும் நானாக இல்லை
பொல்லாத நினைவுகளில் நீ வந்து - என்னுள்
முடிவிலியாய் நீளுகின்றாய்............
முடிவிலிக்கு ஏதுமுடிவு?
நீளும் நின் நினைவுகளால்
சூழும் வினை அகற்றி - எமை
நாளும் காத்திட
எம்முள் என்றென்றும்
நீ இருப்பாய் தெய்வமாய்.

(முற்றும்)



# பிராமண தெரு

## 1.0 அறிமுகம்

பருத்தித்துறையின் கிழக்கே 1கி.மீ தூரத்தில் அமைந்த தும்பளையின் மேற்குப் பகுதியில் கலட்டி என்று பேச்சு வழக்கில் அழைக்கப்படும் பகுதியில் பிராமண தெரு அமைந்துள்ளது. பிராமணர்கள் செறிந்து வாழ்ந்தமையால் இத்தெருவை பிராமண தெரு என அழைப்பர். முன்னர் **அக்ரகாரத்தெரு** என்று பிராமணர் அழைத்தனர்.

### 1.1 பிராமணர்களின் குடியேற்றம்.

தும்பளை மேற்கு கலட்டிப் பகுதியில் புனாரையடி (முச்சந்தி) முதல் தபாற்பெட்டி (நாற்) சந்தி வரை அமைந்துள்ள இத்தெருவில் பிராமணர்களின் குடியேற்றம் பற்றி பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

### 1.1.2 பருத்தித்துறை செட்டிமார்கள் குடியேற்றினர்.

ஒல்லாந்தர் காலத்தில் 1700 களில் பருத்தித்துறையின் துறைமுக வாணிபத்திற்காக குடியேறிய செட்டிமார்கள் கோயில்களில் பூசைக்காக பிராமணரை இங்கு குடியமர்த்தியுள்ளனர். இவர்கள் இந்தியாவின் திருவையாற்றில் இருந்து வந்தவர்களாவர். இந்தப் பிராமணக் குடியமர்வு தும்பளை வீதி தெருமூடிமடத்தடி தொடங்கி பன்னையம்பதியிலும் (பன்னைக் கட்டை) மற்றும் தும்பளை வீதியில் சிற்சில இடங்களில் பரந்து தும்பளை மேற்கில் செறிந்து குடியேறுவதற்குரிய வசதி கிடைத்தது.

### 1.1.3 சோழர் காலத்தில் பிராமணர் குடியேற்றம்.

சோழர் காலத்தில் (கி.பி. 900 -1200) சோழ மகாராஜாவின் மந்திரி பிரதானிகள் பொறுப்பில் ஆட்சி செய்த இடங்களில் ஒன்றாக வடமராட்சியின் கிழக்குக் கரையோர

பட்டினங்களாக வெற்றிலைக் கேணி, செம்பியன் பற்று பகுதிகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின.

சோழ காலத்தில் சில பிராமணக் குடும்பங்கள் தும்பளையில் தனிப்பட்டதோர் இடத்தில் குடியமர்த்தப்பட்டு இப்பகுதியில் அமைந்த கோயில் பூசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். தும்பளையில் பிராமணர்கள் சோழர் காலத்தில் பிராமணர் தோட்டம், பிராமணன் திடல் என்று அழைக்கப்பட்ட பகுதிகளில் வாழ்ந்துள்ளனர். என பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா குறிப்பிடுகின்றார்.( வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம் - வடமரட்சியில் சோழர் காலக் குடியிருப்புக்கள் மற்றும் பண்பாடு பற்றிய ஒரு உசாவல்) இதற்கு ஆதாரமாக அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தன் கூறிய பின்வரும் தகவல் பொருத்தப்பாடுடையதாக காணப்படுகின்றது.

### 1.1.4 பருத்தித்துறை கிழக்கில் சோழர் காலச் சிவன்கோவில்

கற்கோவளத்திற்கும் வல்லிபுரக்கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் சோழர்களால் கட்டப்பட்ட பெரிய சிவன் கோயில் இருந்தது. இதற்கு யாழ்ப்பாண மன்னன் பரராச சேகரனால் மானியம் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் போர்த்துக் கீசரால் இந்தச் சிவன் கோயில் இடிக்கப்பட்டு விட்டது.

இது போன்ற பெரும் கோயில்கள் வடமராட்சியின் வேறு சில இடங்களிலும் இருந்துள்ளன. இவற்றின் பூசகர்களாக இந்தியாவில் இருந்து அழைத்துவரப்பட்ட பிராமணர்களில் ஒரு பகுதியினர் தும்பளை மேற்கில் குடியமர்த்தப் பட்டிருக்கின்றனர். (இணைத்தகவல் இ. பத்மநாபன் J.P)சோழ சாம்ராட்சியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர் பருத்தித்துறைத் துறைமுகம் சிறிது சிறிதாக முக்கியம் பெறத் தொடங்கியது. வடமராட்சி கிழக்கில் வாழ்ந்த மக்களும் படிப்படியாக, காலத்திற்குக் காலம் பருத்தித்துறைத் துறைமுகத்தை அண்டிய பகுதிகளில் குடியேறினர். இவ்வாறு குடியேறியவர்களில் பிராமணர்கள் ஏற்கனவே சோழர் காலத்தில்



இருந்து தும்பளை மேற்கில் வாழ்ந்த பிராமணக் குடியிருப்பு பகுதியில் குடியேறி உள்ளனர்.

### 1.1.5 திருக்கோணேஸ்வரம் - தும்பளை பிராமணர்களின் தொடர்பு

திருகோணமலையில் குளக்கோட்டு மகாராசாவினால் அமைக்கப் பெற்ற திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கோயில் பரிசாரகர்களாக தும்பளை தம்பசிட்டி பிராமணர்கள் நியமனம் பெற்றிருந்தனர் என திருக்கோணஸ்வர ஆலயத்துத் தோம்புப் பதிவுகளில் உள்ளன. என பேராசிரியர் செ. கிருஷ்ணராஜா குறிப்பிட்டுள்ளார். ( பரிசாரகர் - மடப்பள்ளி வேலை செய்யும் பிராமணர்)

### 1.1.6 கடற் கொந்தளிப்பும் - குடிபெயர்வும்

கி.பி 1500 - 1600 களில் பெருங் கடற் கொந்தளிப்பு (சுனாமி) ஏற்பட்டதாகவும் பருத்தித்துறையில் முருகைக் கற்களால் பேரழிவு பெரிதும் தடுக்கப்பட்டதாகவும் அதிகம் பாதிக்கப்பட்ட மாதகல், சில்லாலை மயிலிட்டிப் பகுதி மக்களும், வடமராட்சி கிழக்கில் செம்பியன் பற்று தாளையடி , வெற்றிலைக்கேணி உடுத்துறை போன்ற பகுதிகளில் வாழ்ந்த மக்களில் பலர் பருத்தித்துறையின் துறைமுகத்தைச் சூழ்ந்த கிராமங்களில் குடியேறினர். என்ற தகவல் ஞானப் பிரகாச சுவாமிகள் எழுதிய நூலொன்றிலும் தும்பளைப் பஞ்சாங்கக் காரர்களின் குறிப்பேட்டிலும் இருந்தது. (தகவல் பண்டிதர் க. சச்சிதானந்தன்)இவ்வேளை ஒரு சில பிராமணக் குடும்பங்களும் இங்கு வந்து குடியேறியுள்ளனர்

### 1.1.7 மன்னர் சங்கிலியன் தலைமறைவாய் வாழ்ந்த இடம்

நல்லூரை இராசதானியாகக் கொண்டு யாழ்ப்பாண இராட்சியத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியன். போர்த்துக் கீசப் படைகளால் தோற்கடிக்கப்பட்டு தப்பி ஓடி தும்பளை

மேற்கில் உள்ள பிராமணர் குடியிருப்பில் பிராமண வேடத்தில் **சந்தரபானு** என்னும் பெயருடன் கரந்துறைத்து வாழ்ந்து வந்தான். யாழ்ப்பாண இராட்சிய மன்னர்களும் ஆரியரான பிராமணர்களாவார்.

பின்னர் சங்கிலி மன்னனை **கற்கோவளத்து ஆழ்வான்** என்ற கடலோடியின் உதவியுடன் இந்தியாவிற்கு பாதுகாப்பாக தும்பளை மேற்கு சித்த வைத்தியர்களும், சோதிடர்களும் அனுப்பி வைத்தனர். இக்கருத்தை போராசிரியர் செ. கிருஷ்ணராஜாவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இவனது குடும்பத்தைச் சேர்ந்த சங்கிலியனோடு 12 பிராமணர்களும் தும்பளை மேற்குப் பகுதியிற்கு வந்தனர். என்றும் அறியப்படுகின்றது. கூட வந்த 12 பேரும் பிராமண வம்சத்தைச் சேர்ந்த சங்கிலியனின் குடும்ப உறுப்பினர், நம்பிக்கையான மந்திரி, மெய்ப்பாதுகாவலர் மற்றும் பிரதானிகளாக இருக்கலாம். என நம்பப்படுகின்றது. (தகவல் அமரர் வ. செல்வரத்தினம் ஆசிரியர் - 1994)

## 2.0 சோழ சாம்ராட்சியம் சந்திரப் பரமானந்தர் குடியினரின் குடியமர்வு

2.1 சோழ சாம்ராட்சிய காலத்தில் வெற்றிலைக் கேணியில் சந்திரப் பரமானந்தர் என்பவர் மந்திரி பிரதானிகளுக்கு ஆஸ்தான கோதிடராகவும் வைத்தியராகவும் பெருஞ் செல்வாக்குப் பெற்று விளங்கினார். சோழ்சாம்ராட்சியத்தின் வீழ்ச்சிக்குப்பின்னர் சந்திரப் பரமானந்தர் குடும்பமும் அவரது இனசனங்கள் பலரும் தும்பளை மேற்கில் பிராமண வீதியைச் சூழ்ந்த பகுதிகளில் குடியமர்த்தனர். **சந்திரப் பரமானந்தரின் நேரடி வாரிசுகள் கொண்ட குடும்பங்களையும் அவர்தம் இனசன உறவுகளையும் சந்திரப் பரமானந்தர்குடி என்றே நான் வசதிகருதி குறிப்பிட்டு வருகிறேன்.**



### 2.1.2 மன்னன் சங்கிலியனும் - தும்பளை மேற்கு சோதிட வைத்தியர்களும்

மன்னன் சங்கிலியனின் பரம்பரையினர் சோதிடம் (வானியல்) மருத்துவ துறைகளில் பாண்டித்தியம் பெற்றவர்களாக இருந்தனர். இதே போல் வடமராட்சி கிழக்கில் இருந்து வந்து குடியேறிய எமது சந்திரப் பரமானந்தர் குடியினர் பலரும் சோதிடம் (வானியல்) வைத்தியத்துறைகளில் சிறந்து விளங்கினர்.

சங்கிலிய மன்னனும் அவனது ஆட்களும் தும்பளையில் ஒழித்திருந்தவேளை பரமானந்தர் குடி சோதிட வைத்தியர்களும் இராப்பொழுதில் ஓரிடத்தில் சந்தித்து சோதிடம், வைத்தியம் பற்றி பரஸ்பரம் கலந்துரையாடி தமது அறிவைப் பெருக்கியும் சில தெளிவுகளைப் பெற்றும் பயனடைந்தனர். இவ்வாறு இரு சாராரும் சந்திக்கும் இடம் **படிக்கிற வளவு** என்று பெயர் பெற்று இன்றும் அப்பெயராலேயே அழைக்கப்படுகின்றது. வைத்தியம் செய்வதற்காக என்ற சாட்டில் கற்கோவளம் சென்று **ஆழ்வான்** என்ற கடலோடி மூலம் சங்கிலியனை இந்தியாவிற்கு அனுப்பியவர்கள் தும்பளை மேற்கு சந்திரப் பரமானந்தர் குடியினரே ஆவர்.

2.1.3 படிக்கிற வளவில் இருந்த வானியல் சம்பந்தமான ஏடுகளை பண்டிதர் சச்சியின் மூதாதையர் வைத்திருந்தனர். இறுதியில் பண்டிதர் சச்சிதானந்தன் மாவிட்ட புரத்தில் இவற்றை வைத்திருந்தார். இடப்பெயர்வின் போது இவை தொலைந்து போனது. எமது துரதிஸ்ட வசமாகும். இந்த ஏடுகளை திரு செ. சிதம்பர நாதன் (ஓய்வு பெற்ற அதிபர் பரு. கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை) அவர்கள் மாவிட்டபுரம் சென்று பார்வையிட்டதாக அறியப்படுகின்றது.

தொகுத்துப் பார்க்கும் போது பிராமண தெருப் பிராமணர்கள் 04 பிரதான கட்டங்களில் இங்கு வந்து குடியேறியுள்ளனர்.

1. சோழர் காலத்தில் அமைக்கப்பட்ட கோயில்களின் பூசகர்களாக வந்துள்ளனர்.
2. வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி, செம்பியன் பற்று மற்றும் பகுதிகளில் வாழ்ந்த பிராமணர்கள்

காலத்தக்கு காலம் பொருளாதார நெருக்கடிகள், இயற்கை அனர்த்தங்கள் காரணமாக இங்குவந்து குடியேறியுள்ளனர்.

3.சங்கிலிய மன்னுடன் வந்தவர்களில் ஒரு சிலர் இங்கு தங்கியுள்ளார்கள்.

4.ஒல்லாந்தர்காலத்தில் பருத்தித்துறைச்செட்டிமார் களால் அழைத்துவரப்பட்டுகுடியேறியுள்ளார்கள்.

## 3.0 அச்சுக்கூடம் - கலாநிதி யந்திரசாலை

3.1 பிராமண தெருவுக்கு பெருமை தேடித்தந்தது கலாநிதி யந்திரசாலை என்ற அச்சகமாகும். அக்காலத்தில் வடமராட்சியில் ஒரு சில சிறிய அச்சகங்கள் இருந்தாலும் பாரிய யந்திரங்கள் கொண்ட பெரிய அச்சகமாக கலாநிதி யந்திர சாலையே காணப்பட்டது. இன்றும் இந்த இடம் **அச்சுக்கூடத்தடி** என்றே அழைக்கப்படுகின்றது.

1800களின் பிற்பகுதியில் **சோமசுந்தர ஐயர்** இந்த அச்சுக் கூடத்தை நிறுவினார். இவரின் தமையனார் சுப்பிரமணியசாஸ்திரிகள் மேலைப்புலோலி சிவப்பிரகாச வித்தியாசாலையில் பின்னாளில் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

சுப்பிரமணிய சாஸ்திரிகள் புகழ் பெற்ற சோதிடர். பஞ்சாங்கம் கணிப்பதில் வல்லவர். கலாநிதி யந்திர சாலைக்கு முன்னால் இவர்களின் வீடு அமைந்துள்ளது. தினமும் சாதகம் பார்க்க பலர் வந்து போவர்.

இந்த அச்சுக்கூடம் நிறுவப்பட்ட பின் சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஏட்டில் கணித்து விநியோகித்த பஞ்சாங்கம் அச்சில் வெளி வந்தது. இது காலத்தின் அறிவுப் பாய்ச்சலாக இருந்தது. தமிழ், **சமஸ்கிருதம்,** நாகரம் ஆகிய மொழிகளில் இங்கு அச்சுவசதி இருந்தது இலங்கையில் [redacted] **அச்சுவடிவில்** வெளிவந்த பஞ்சாங்கம் இதுவாகும். (தகவல் திரு. ச.கந்தசாமி வாத்தியார் - (82) - 2009 )



### 3.1.2 சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பணிகள்

சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பணிகள் எமது கல்விப்பாரம்பரியத்தின் பாய்ச்சலாய் வரலாறாகி எம்முன்னால் நிற்கின்றன

1. சொற்பொருள் விளக்கம் என்ற தமிழ் அகராதியை 1924ல் அச்சிட்டு வெளியிட்டார்.
2. தோத்திரத் திரட்டுக்கள் பலவற்றை அச்சிட்டு வெளியிட்டார்.
3. கந்தபுராணத்தில் உற்பத்திக் காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம் முதலானவற்றுக்கும் ஆத்திசூடி, நன்னெறிநீதிவெண்பா என்பவற்றிற்கும் உரையெழுதி வெளியிட்டார்.
4. புராணபடல சொற்பொழிவாற்றி ஆன்மீக அறிவையும் ஒழுக்க விழுமியங்களையும் மக்கள் மனதில் பதிய வைத்தார். செவி புலன் மூலம் மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தினார்.
5. **திண்ணைப் பள்ளிக்கூடமொன்றை நிறுவி** தமிழ், சமஸ்கிருதம் , புராண இதிகாசங்கள் என்பவற்றை போதித்து அறிவு சார் மாணாக்கர் பரம்பரையை உருவாக்கினார்.
6. தனது செலவில் ஏராளமான புத்தகங்களை வாங்கி **புத்தகத் தருமாலயம்** (நூலகம்) ஒன்றை அமைத்து எழுத வாசிக்கத் தெரிந்தோருக்கு இலவசமாக வழங்கி வாசிக்கும் முறையை அமுல் படுத்தி அறிவூட்டினார்.
7. சோதிடக்கலையையும் தன் மாணாக்கருக்குக் கற்றுக் கொடுத்துள்ளார். குறிப்பாக இவரின் தம்பி அச்சுக்கூட நிறுவுனரின் மகன் **வைத்தியநாதஐயர்** சோதிடத்தில் மிக்க பாண்டித்தியம் பெற்றார்.

1875ல் பிறந்த சுப்பிரமணிய சாஸ்திரிகள் 1950ல் இறந்த பின் இவரின் தம்பி மகன் வைத்தியநாதஐயர் அச்சுக்கூடப்பொறுப்புக்களை ஏற்றது மட்டுமன்றி பஞ்சாங்கத்தைக் கணித்து வெளியிட்டு வந்தார்.

சுப்பிரமணிய சாஸ்திரிகளின் பஞ்சாங்கம் இலங்கையில் மட்டுமன்றி சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கும்

அனுப்பப்பட்டு வந்தது.

### 3.1.3 கலாநிதியந்திரசாலையின் இறுதிக்காலம்

வைத்தியநாதஐயரின் அகால மரணத்துடன் பஞ்சாங்கக் கணிப்பு நின்று போனது. இவரின் தம்பி **விசுவநாத ஐயர்** சில காலம் அச்சுக்கூடத்தை நடத்தி வந்தார். பின்னர் அச்சுக்கூடம் இயங்காமல் நின்று விட்டது. அச்சுக்கூடம் இயங்கிய காலத்தில் பிராமண தெரு சன நடமாட்டம் மிகுந்த தெருவாக இருந்தது.

### 3.1.4 அச்சுக்கூடத்தடி வீடுகள்

அச்சுக் கூடத்துக்கு முன்னால் இவர்களின் வீடு அமைந்திருந்தது. 100 அடிக்கு மேல் நீளமுள்ள முன்முகப்பில் திண்ணைகளும் 5, 6 கதவுகளும் கொண்டன. அச்சுக் கூட வேலைகளின் ஒரு பகுதியை இந்தத் திண்ணையில் இருந்தே தொழிலாளர் செய்தனர். எமது ஊரைச் சேர்ந்த பிராமணர் அல்லாத எமது ஆட்கள் பலர் இந்த இந்த அச்சுக்கூடத்தில் தொழில் புரிந்தனர். இதனால் பலருக்கு புத்தகம் கட்டும் (Book binding) துறையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். இங்கு தொழில் புரிந்த பருத்தித்துறையைச் சேர்ந்த **நாகலிங்கம்** என்பார் பின்னாளில் பருத்தித்துறையில் **ஊழியன் அச்சகத்தைப்** பொறுப்பேற்று நடத்தி வந்தார். இன்று இவரது மகனும் நியூ ஊழியன் அச்சகத்தை பருத்தித்துறை வீதியில் அமைத்து. நடத்தி வருகின்றார்.

## 4.0 சுப்பிரமணிய சாஸ்திரிகள், கணபதிப்பிள்ளை சோதிடர் முரண்பாடு

4.1 தும்பளை மேற்கில் அமரர் பண்டிதர் க. சச்சிதானந்தன் அவ்களின் பரம்பரையினரும் 07 தலைமுறைகளாக 1642ல் இருந்து ஏட்டுச்சுவடிகளில் தும்பளைப் பஞ்சாங்கத்தை வெளியிட்டு வந்தனர். இவர்கள் வானியல் வல்லுனர்கள் ஆகத் திகழ்ந்தனர்.



சுப்பிரமணிய சாஸ்திரிகள் தனது பஞ்சாங்கத்தை அச்சு வடிவில் நூலாக வெளியிட்ட போது பண்டிதர் க. சச்சிதானந்தனின் தகப்பனார் வே. கணபதிப்பிள்ளை அவர்கள் 1901ல் அச்சுவேலியில் உள்ள அச்சகமொன்றில் அச்சு வடிவில் **தும்பளை பஞ்சாங்கத்தை** வெளியிட்டார். பின்னர் வசதியின்மையால் 1902ல் இருந்து 1911வரை பிராமணதெரு கலாநிதி யந்திர சாலையில் அச்சிட்டு வெளியட்டனர். சுப்பிரமணிய சாஸ்திரிகளும் வே. கணபதிப்பிள்ளை அவர்களும் ஒரு அச்சகத்தில் பஞ்சாங்கத்தை அச்சடித்து வந்த போது கணிப்பு முறை சம்பந்தமான முரண்பாடு அச்சகத்தில் ஏற்படுவது தவிர்க்க முடியாமல் போயிற்று. சுப்பிரமணிய ஐயர் **பூபதி** என்ற பெயரில் எழுதிய கட்டுரைகளை எதிர்த்து கணபதிப்பிள்ளை அவர்கள் **பூபதிப்புலுடா** என்ற கட்டுரை எழுதினார். இதனால் சுப்பிரமணிய ஐயர் வழக்குத் தொடர்ந்தார். வழக்கு தள்ளுபடியாயுள்ளது.

### 4.1.2 கொக்குவில் பஞ்சாங்கமும் - கணபதிப்பிள்ளையும்

திரு.வே.கணபதிப்பிள்ளை அவர்கள் தாமாக பஞ்சாங்கத்தை வெளியிடுவதை நிறுத்தி விட்டு கொக்குவில் இரகுநாதையர் பஞ்சாங்கக் கணிப்பில் முக்கியத்துவமுள்ள ஒருவராக 1912ல் இணைந்து கொண்டார். மகன் பண்டிதர் க. சச்சிதானந்தனும் இறுதிவரை இரகுநாதையர் பஞ்சாங்கக் கணிப்பில் குறிப்பிட்ட பகுதியை கணிப்பதில் ஈடுபட்டு வந்தார்.

## 5.0 பிராமண தெரு - பிராமணரின் வாழ்க்கை முறை

பிராமண தெரு பிராமணர்களின் வீடுகள் சுண்ணாம்புக் கட்டடங்களால் ஆன பெரிய வீடுகள் ஊரோடுகளால் வேயப்பட்டிருக்கும். பல வீடுகள் நாற்சார் வீட்டமைப்பைக் கொண்டன. சுற்றுமதில்கள் மிகவும் உயர்ந்து வீட்டை மறைத்துக் கொள்ளும். தெரு வாசலில் உயர்ந்த பெரிய சிறகுக் கதவுகள் இருக்கும். வெளியார் கூப்பிட்டால் கதவின் மேற் சிறகை மட்டும் திறந்து கதைத்து விட்டு அனுப்பி விடுவர்.

வீட்டிற்குள் பிராமணர் அல்லாதோரை அனுமதிப்பதில்லை.

தமது வீடுகளில் சிறியகோயில் அல்லது பூஜை அறை அமைத்து தினசரி வழிபாட்டில் ஈடுபடுவர்.வீட்டை அதிகாலையிலேயே கூட்டித் துப்புரவாக்கி விடுவர். வீட்டுத்தெருவையும் துப்புரவாக்கி தண்ணீர் தெளித்து முகப்புத்திண்ணையில் மாக்கோலம் இட்டு நடுவில் சாணத்தால் பிள்ளையார் பிடித்து வைப்பர்.எம்மவரின் சுப தினங்களுக்கு வந்து மிக சிறப்பான பதத்தில் வடை போன்ற பலகாரங்களை ஆக்கி தருவர்.

### 5.1.2 மரங்கள் வளர்ப்பு, நந்தவனம், தூய்மை

பிராமண வீடுகளில் பல விதமான பூமரங்களும் வளர்ந்து நந்தவனமாகக் காட்சியளிக்கும். விளா, நெல்லி, வில்வம், நொச்சி, அறுகு,போன்ற பஞ்சவில்வ மரங்களுடன் மருதோண்டி, கொன்றை, பன்னீர்,பொன்அலரி,செவ் அலரி, மல்லிகை அத்தி போன்ற பலவித மரங்கள் பூசைக்கும் பூமாலை கட்டுவதற்கும் உதவும். வீட்டை அதிகாலையிலேயே கூட்டித்துப்புரவாக்கிய பின் தினசரி தலையில் தண்ணீர் வார்த்து தோய்ந்து குளித்து திருநீற்றிப் பூச்சுடன் காணப்படுவர். நெல்லி விளாம்பழம் போன்றவற்றை விற்பனை செய்வர். நெல்லிக்காயில் ஊறுகாய் போடுவர். விளாம்பழத்திற்கு கந்தஷஷ்டிக் காலத்தில் நல்ல மவுசு இருக்கும்.

ஆனால் அவர்கள் வீடுகளில் வேப்பமரங்கள் குறைவாகவே இருந்தன இதனால் பிராமணர் அல்லாதோர் வீடுகளில் வேப்பம்பூவை கூட்டி எடுத்து பக்குவமாய் கொண்டு சென்று வடாகம் செய்வர். மோர் மிளகாய், நெய் தயிர், மோர், இரசம் என்பனவற்றை தினசரி உணவில் பயன்படுத்துவர். உறைமோர் வாங்க பலர் பிராமண வீடுகளுக்குச் செல்வர்.முன்னர் பிராமணர் பொதுவாகனங்களில் பொதுமக்களுடன் கலந்துசெல்வதில்லை, தற்போது இந்நிலை மாறிவிட்டது.



### 5.1.3 பிராமணரும் சடங்குகளும்

பூணூல் அணியும் சடங்கை நாம் பூணூல் கலியாணம் என்று கூறுவோம். சிறுவயதிலேயே ஆண்களுக்கு இச்சடங்கை கொண்டாடுவர். பிராமணரல்லாத எங்களுக்கும் அழைப்பு வரும். நாங்களும் செல்வோம்.நல்ல வரவேற்பு கிடைக்கும். திருமண விழாவிற்கும் எம்மை அழைப்பர். விழாக்களுக்கு வருகை தரும் பிராமணர்களுக்கு மறைவாக தனியாக சாப்பாடு பரிமாறப்படும். அவர்கள் சாப்பிடுவதை நாம் பார்க்கக்கூடாது என்ற வழமை இன்றும் இருந்து வருகிறது.

எமது வீட்டுத்தினங்களுக்கு வந்து வாழ்த்தி விட்டுச் செல்வர். எதுவும் சாப்பிடுவதில்லை.செத்த வீட்டிற்கு பிணம் இருக்கும் வரை வரமாட்டார்கள். பிறகு தான் வருவார்கள்.

வீட்டில் ஆண்கள் நாலுமுழ வேட்டி வகைகளை அணிவர் . சாரம் உடுப்பதில்லை பெண்கள் நீளப் பாவாடையும் கழுத்து வைத்த மேற்சட்டையும் அணிவர்.

எம்மவரோடு ஒப்பிடுகையில் உடலையும், சுற்றாடலையும் மிகவும் தூய்மையாகவும், அழகாகவும் பேணுவர். இறுதிக்கிரிகைகளிலும் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் சபிண்டி, மாசியம், திவசம் போன்றகிரிகைகளை எங்கள் வீடுகளில் வந்து நடத்துவர், இன்ன திகதியில் திவசம் வருகிறது என முன்னரே எமக்கு நினைவூட்டுவர்.

வெள்ளை அரிசிச்சோறு பிராமணருக்கு மிகவும் பிடிக்கும் கூப்பன் கடையில் கிடைக்கும் பச்சை அரிசி, புழுங்கல் அரிசி போன்றவற்றை எம்மவருக்குக் கொடுத்து பதிலாக வெள்ளை அரிசியை பண்ட மாற்றாகப் பெற்றுக்கொள்வர்.

அயலில் வசிக்கும் எம்மவரின் சிறுகுழந்தைகளை தூக்கி மகிழ்வர் . தூக்க முன் குழந்தை குளித்து விட்டதா என்று கேட்டு உறுதிப்படுத்திய பின்னர் தான் தூக்குவர். சில வேளை குழந்தை முட்டை,மீன் என்பன சாப்பிட்டுவிட்டால் பிராமணருக்கு மணக்காமல் நாம் செய்யும் பிராயத்தனங்கள் பல

அயலில் உள்ள எம்மவர் பிராமணர் அறியாமல் இடைக்கிடை மச்ச மாமிசம் வாங்கிச்சமைப்பர், ஆயினும் பிராமணவீதியில் வாழ்ந்த எம்மவரில் பலர் சைவச்சாப்பாடே சாப்பிட்டு பழகி விட்டவர்களாக இருந்தனர் எனது தாயாரும் சைவம்தான். இவர்களை பார்த்து எம்மவரும் வெளியால் சென்று வந்தால் கால் கழுவிய பின் தான் வீட்டுக்குள் செல்வர். திருமதி கமலாம்பிகை பாலகிருஸ்ணனும் இதில் இறுதிவரை கடும் போக்காகவே இருந்தார்.

சித்திரை வருடப்பிறப்பன்று மருத்து நீர் ஆக்கி வழங்குவர். எம்மவர்கள் சிறு காணிக்கையை வழங்கி மருத்து நீரைப் பெற்றுக் கொள்வர்.வருடம் பிறந்து முதன்முதல் பணம் கொடுக்க விரும்பாத பலர் முதலிலேயே பணம் செலுத்தி தமக்கான மருத்துநீரை முற்பதிவு செய்துவிடுவர்.

### 5.1.4 திருமண உறவு

மாமன் மருமகள் திருமண முறையும் இவர்கள் மத்தியில் உள்ளது. ஒரே வீட்டில் வளர்ந்த மாமன் மருமகள் திருமணம் எமக்கு வியப்பை அளித்தன.

மனைவி இறந்தால் மறுமணம் செய்திடுவர் திருமணமான அந்தணரே கோயில் பூசைகளில் ஈடுபடலாம் இந்த நடைமுறை கோயிலில் ஒழுக்கக் கேடுகளை தவிர்க்க பெரிதும் உதவியது.

பிராமணர்கள் பூசையுடன் ,புரோகிதம் செய்து நல்ல வருமானம் பெற்றார்கள்.ஒற்றைத்திருக்கல் மாட்டுவண்டிகள் இதற்கென வைத்திருந்தனர். பிற்காலத்தில் புரோகிதம் குறையவே வேறு ஊர்களுக்கு திருமணம் செய்தும் புரோகிதம் செய்யவும் பூசை செய்யவும் என இங்கிருந்து போய் விட்டனர். காலமாற்றத்தில் பிராமணரின் வீட்டு வளவையும் ,காணிகளையும் எம்மவர் வாங்கினர்.

## 6.0 எம்மவரால் வாங்கப்பட்ட பிராமணரின் வீடு காணிகள்

அறியப்பட்டவரை பிராமணர்களிடம் இருந்து வீடு வளவு காணிகளை வாங்கியோர் வசிக்கும் வீடுகளை கீழே தருகி றேன்.



**6.1.** தியாகையரின (துரைஜயர்) அடுத்தடுத்த காணிகளில் ஒன்றில் வீடும் மற்றையதில் சிவன் கோயிலும் இருந்தது. வீடு இருந்த காணியை வன்னி வணிகர் குமரேசு அவர்கள் வாங்கினார். பழைய சுண்ணாம்பு வீட்டை இடித்து சுற்று மதிலின் உயரத்தைக் குறைத்து புதிய வீடு கட்டி மகள் பாக்கியலக்சுமிக்கு சீதனமாகக் கொடுத்தார். இவரின் கணவர் பிரபல கணித ஆசான் சிவஞான சுந்தரம் ஆவார். தற்போது இவர்களின் மூத்த மகள் திருமதி ரேவதி சிவநேசன் தம்பதியினர் வசிக்கின்றனர்.

**6.1.1** தியாகையரின (துரை ஜயர்) காணியில் சிவன்கோயில் இருந்து இங்கு வெளியார் அதிகம் செல்வதில்லை. பெரிய லிங்கமும், சிவனும், அம்மனும் இக்கோயிலில் பிரதிஸ்டை செய்யப்பட்டிருந்தன.திருவிழாவும் நடந்துள்ளது துரைஜயர் 1950ல் இறந்த பின் இங்கிருந்த சிவன் அம்மன் ஆகியவை புன்னலைக்கட்டுவனுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டது. இந்தக் கோயில் காணியை திரு.இரத்தினவடிவேல் அவர்கள் வாங்கி உரிய கிரியைகள் செய்த பின் வீடு கட்டினார். தற்போது இவரின் உறவினர் சாந்தகுமார் இந்த வீட்டில் வசிக்கின்றார். திருகோணமலையில் இவர் பூசகராக பணிசெய்தமையால் இந்து விக்கிரகங்கள் திருகோணமலைக்கு எடுத்து செல்லப்பட்டு விட்டன என திரு.ச.கந்தகாமி வாத்தியார் கூறுகின்றார்.

**6.2** முத்துச்சாமிக்குருக்களின் வீட்டை மாப்பாணர் வாங்கி பின்னர் ஆழ்வாப்பிள்ளை வாத்தியாரின் தகப்பன் பாலப்பாவிற்கு விற்றார். இங்கு ஆழ்வாப்பிள்ளை வாத்தியார் குடும்பத்தினர் சுற்று மதிலை பதிவாக்கியும் பழைய வீட்டை இடித்தும் புதிய வீட்டினைக் கட்டி வாழ்ந்தனர். தற்போது மூத்த மகள் திருமதி சந்திரா மருணீக்கியாருக்கு சொந்தமாக உள்ளது. பாலப்பா, சீனி வாத்தியார் சிவப்பிரகாச வித்தியாசாலையை உருவாக்கிய போது தோள் கொடுத்தவர்களில் ஒருவர் வன்னியில் இருந்து பாடசாலைக்குத் தேவையான தளபாடங்களைச் செய்யத்தேவையான பலகைகள்,மரங்கள் என்பவற்றை கொண்டு வந்து கொடுத்தார்.

**6.3** தம்பையா ஐயரை சொத்திப்பாட்டா என அழைப்பர் இவரின் வீட்டை வாங்கி திருமதி மாணிக்கம் செல்வரத்தினம் அவர்கள் வசித்து வந்தனர். அண்மையில் இந்த வீட்டை சிவஞானம் மகள் திருமதி சுபாசினி சபேசன் வாங்கி வாழ்ந்துவருகின்றனர்.

**6.4** இதன் மேற்கால் உள்ள பவானியம்மா வாழ்ந்த வீடு ஏகாம்பரஜயருடையது. இவரின் மகன் பாலசுப்பிரமணியஐயர் பவானியம்மாவை திருமணம் செய்தவராவார்.இதன் மேற்கால் உள்ள பூபதி ஐயர் வீட்டை திருஞானசம்பந்தர் வாங்கி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தனர். அண்மையில் திரு. சி. நடராசாவின் மகள் சியாமளா திகழ்ஒளிபவன் இந்த வீட்டையும், பவானியம்மாவின் காணியயும் வாங்கி வாழ்ந்து வருகின்றனர்.

**6.5** சுப்பிரமணிய சாஸ்திரிகளின் தம்பி நண்டையர் என அழைக்கப்பட்டவரின் வீட்டுக்காணியை சரவணமுத்து பட்டயக்கணக்காளர் வாங்கினார் இது பலகாலம் ஆழ்வாப்பிள்ளை வாத்தியாரின் பராமரிப்பில் இருந்தது.

**6.6** தோட்டப்பை வளவில் திருமதி சந்தானலக்சுமி பஞ்சாச்சரம் குடும்பத்தினர் வசிக்கும் வீட்டுவளவும், அதற்கு முன்னால் உள்ள காணியும் முன்னர் பிராமணருடையதாக இருந்தது இவர்களின் மூத்தபரம்பரையை சேர்ந்த இராமலிங்கம் என்பார் இக்காணியை வாங்கினார். சின்னக்குட்டியப்பா (தாமோதிரம் பிள்ளை) அவர்களும் தோட்டப்பாயில் வாழ்ந்தவராவார்.

## 7.0 பெரியதம்பிரான் கோயில், ஸ்ரீ வரத விநாயகர் கோயில் உருவாக்கம்

**7.1** பெரியதம்பிரான் கோயில் உள்ள பிள்ளையார் கோயில் ( தும்பளை பெரிய வளவு ஸ்ரீ வரத வினாயகர் கோயில்) உருவாக்கம் பற்றி பலமாறுபாடான கருத்துக்கள் உள்ளன. இதுபற்றி பேசப்போய் வாய்தர்க்கம் கூட ஏற்பட்டிருக்கிறது. எனினும் இங்கு தரும் கருத்துக்கள் உண்மையை அறிய உந்து சக்தியாக இருக்கும்.

பெரியதம்பிரான் கோயில் 1400 களிலேயே பரமானந்தச்



சோதிடரின் வழித்தோன்றல் களால் உருவாக்கப்பட்டுவிட்டது. இதை வீரபத்திரகோயில் என்றுதான் எம்மவர் அழைப்பர். இது பற்றி திரு. வ. செல்வரத்தினம் ஆசிரியரிடம் வினாவிய போது இக்கோயில் வீரபத்திரர் விக்கிரகம் (வீரபத்திரர்,அம்மன்) சோழமகாராசாவின் ஆஸ்தான சோதிட வைத்தியராக இருந்த சந்திரப்பரமானந்தரின் குடும்ப வாரிசுகளால் 1400 ம் ஆண்டளவில் இந்தியாவின் நாகர் கோவிலில் இருந்து கொண்டு வரப்பட்டது என்றும் தலையில்(முடியில்)லிங்கம் உள்ள வீரபத்திரர் பெரிய தம்பிரான் எனவும் அழைக்கப்படுவர். எனக் கூறினார்.(இணைத்தகவல் திரு.தி.சுப்பிரமணியம் - சுப்பண்ணா)

**7.1.1** மன்னன் சங்கிலியனும் அவனுடன் கூடவந்த 12 பேரும் பிராமண தெருவில் பிராமணர் வீடுகளில் ஒழிந்திருந்த வேளை பெரியதம்பிரான் கோயில் இருந்த இடத்தில் வடபுறம் இலந்தை மரத்தின் கீழ்ஓரளவில் பிள்ளையார் வடிவமுள்ள சிறிய கல்லை வைத்து வழிபட்டு வந்தனர்.போர்த்துக்கேயர் ஆட்சியில் சைவக்கோயில்கள் இடிக்கப்பட்டு வழிபாட்டுக்கும் தடை இருந்தமையால் வீரபத்திர மூர்த்தமான பெரியதம்பிரான் விக்கிரகத்தை லட்சுமணன் தோட்டத்தில் உள்ள செந்தாவத்தைக் காணியுள் புதைத்து வைத்திருந்தனர். பெரியதம்பிரான் கோயிலில் சூலத்தை நாட்டி சிலுவை போல் வைத்திருந்து வழிபட்டனர்.

இலந்தை மரத்தின் கீழ் கோயில் என்று தெரியாதபடி சிறிய கல்லை வைத்து பிள்ளையாரை சங்கிலியனின் ஆட்கள் வழிபட்டனர். இந்த விநாயகர் ஞானசித்தி விநாயகர் என அழைக்கப்பட்டது. ஒல்லாந்தர் ஆட்சியின் முற்பகுதியிலும் புரட்டஸ்தாந்து மதம் தவிர ஏனைய மதக்கோயில் களுக்கும் வழிபாட்டுக்கும் தடை இருந்தது. ஆனால் இவர்களின் ஆட்சியில் மத்திய பகுதியில் இந்தத்தடை தவிர்க்கப்பட்டதால் 1700 களில் செந்தாவத்தையில் புதைக்கப்பட்டிருந்த பெரிய தம்பிரான் சிலை மீண்டும் கொண்டு வரப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

**7.1.2** சங்கிலியன் இந்தியாவுக்கு தப்பி சென்ற பின் இந்த பிள்ளையார் கல் கவனிப்பார் அற்று போனது. போர்த்துகேசர் காலத்தில் தொடங்கி ஒல்லாந்தர் கால நடுப்பகுதி வரை

காணப்பட்ட இந்துசமய வழிபாட்டு தடை தளர்த்தப்பட்ட பின்பு பிள்ளையார்கல் இருந்த இடத்தால் போக்குவரத்து செய்வோர் வணங்கி விட்டே சென்றனர். பின்னர் இன்னமொரு கல் அந்த இடத்தில் வைக்கப்பட்டு பிள்ளையார் வழிபாடு 1700 களின் பிற்பகுதியில் ஓரளவு நடைபெற்றுள்ளது (தகவல் - அமரர் பண்டிதர் க.சச்சிதானந்தன் (80) - 2001 )

7.1.3 தும்பளை மேற்கு கலட்டியார் சிலர் தம்புருவளை பிள்ளையார் கோயில் நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட முரண்பாட்டால் பெரியதம்பிரான் கோயிலின் அருகே அதிகம் கவனிப்பார் அற்று இருந்த பிள்ளையார் கல்லுக்கு 1800 களின் பிற்பகுதியினல் மடாலயம் கட்டினர். ( தகவல் - அமரர்.வ.செல்வரத்தினவாத்தியார்- 1994)

7.1.4 இவ்வாறு பிரிந்து வந்தவர்களில் ச.கந்தசாமி வாத்தியாரின் பேரனான சி.ஆழ்வாப்பிள்ளை மற்றும் சுப்பிரமணியம் சகோதரர்களான ஆ.வ.சின்னத்தம்பி, ஆ.வ.கோவிந்தபிள்ளை,பரமுச்சாத்திரியார்,மணியம் சுப்பர் (க.சுப்பிரமணியம்) சின்னக்குட்டியப்பா (தாமோதிரம்பிள்ளை) சி.செல்லத்துரை போன்றோர் இணைந்து தும்பளை மேற்கு கலட்டியின் பிள்ளையார் ஆலய வளர்ச்சிக்காக பாடுபட்டனர் (தகவல் - ச.கந்தசாமி வாத்தியார் (82) -2009)

7.1.5 ஆரம்ப காலத்தில் இப் பிள்ளையார் கோயிலுக்கு கண்ணன் ஐயர், முருகையர், முத்தச்சாமிஜயர், மாதவையர் ஆகிய பிராமணதெரு பிராமணர்கள் பூசகர்களாக இருந்துள்ளனர். முத்துச்சாமி ஐயரே சிறிய பிள்ளையாரை அமைப்பித்து பிரதிஸ்டை செய்ததாக கூறப்படகிறது. ( தகவல் அமரர்.வ.செல்வரத்தினம் வாத்தியார் -1994)

7.1.6 இந்தப்பிள்ளையார் கோயிலுக்கு பிராமணர் பூசகராக அமர்த்தப்பட்டனர். ஆனால் வீரபத்திர பெரிய தம்பிரான் கோயிலுக்கு சைவர்களே பூசகர்களாக இருந்து வந்தனர். பிராமணர்கள் ஆகம வழி பாடுசாராத வீரபத்திர பெரிய தம்பிரான் போன்ற சிறு தெய்வங்களுக்கு பூசை செய்வதில்லை. அக்காலத்தில் அருகருகே இருந்த இந்த இரண்டு ஆலயங்களும் தனித்தனியான நிர்வாகத்தின் கீழ் இயங்கின.



## 8.0 முத்துச்சாமிக்குருக்களின் ஸ்ரீவரத விநாயகர் கோயில்

8.1 இதில் சர்ச்சைக்குரிய விடயம் என்னவென்றால் 1800களில் வாழ்ந்த முத்துச்சாமி ஐயர் தான் (தற்போது ஆழ்வார்ப்பிள்ளை வாத்தியார் மூத்த மகள் சந்திரா மருள்ணீக்கியார் வசிக்கும் வீட்டின் முன்னைய உரிமையாளர்.) பிள்ளையார் கோயிலை ஸ்தாபித்தவர் என்பது பிராமண சமூகத்தவரின் உறுதியான வரலாறாகும். (தகவல் ப.வைத்தியநாதக்குருக்கள் (94) - 2008) ஏனெனில் சிறிய கல்லாக வழிபடப்பட்ட பிள்ளையாருக்குப் பதிலாக சின்னப்பிள்ளையார் விக்கிரகத்தை அமைத்து பிரதிஸ்டை செய்தவர் முத்துச்சாமி ஐயர் அவர்களே.

இந்த சின்னப்பிள்ளையாரை மூலஸ்தானத்தில் இருந்து அகற்றி தென்மேற்கு புறமாக சின்னப்பிள்ளையார் கோயிலில் வைத்து தற்போதும் முதற்பூசை சின்னப்பிள்ளையாருக்கே நடைபெறுவதை நாம் காணலாம்.

சின்னப்பிள்ளையாருக்கு பதிலாக 1942 ல் டாக்குத்தரப்பா எனப்படும் க.சுப்பிரமணியம் R.M.P அவர்கள் தற்போது மூலவிக்கிரகமாக இருக்கும் பெரிய பிள்ளையாரை உருவாக்கி கொடுத்தார் என்பது பலரும் அறிந்த வரலாறு ஆகும்.

### 8.1.2 பிள்ளையார் கோயிலின் முத்துச்சாமிக்குருக்கள் மாதவையர் முரண்பாடு.

முத்துக்குமாரசாமி குருக்கள் நாவலப்பிட்டியில் கதிரேசன் கோவிலையும் ஸ்தாபகம் செய்து பூசகராக அங்கு கடமையாற்ற வேண்டி வந்தது. அவ்வேளை மைத்துனரான மாதவையரை தன் சார்பில் எமது ஸ்ரீ வரதவிநாயகர் கோயிலுக்கு பூசகராக நியமித்து விட்டு வருமானம் கூடிய நாவலப்பிட்டி கதிரேசன் கோவிலுக்கு சென்று விட்டார்.

பின்னாளில் இக்கோயிற் பூசகர், காணிப்பங்கு தொடர்பாக இருவரிடையேயும் சர்ச்சை ஏற்பட்டு கோட்டில் 1932ல் வழக்குத் தொடரப்பட்டு நீண்ட காலம் நடந்தது. முத்துச்சாமிக் குருக்கள் சார்பில் ஈஸ்வரபாதம் பிறக்கிராசியார்

வாதாடினார். முத்துச்சாமிக்குருக்கள் பக்கம் வேலப்பாவும், மாதவையர் பக்கம் மணியம்சுப்பரும் சாட்சிகளாயினர். ஊர் அப்புக்காத்தாக விளங்கிய மணியம் சுப்பரின் சாட்சியம் கூட நிராகரிக்கப்பட்டு கோயில் பொதுமக்களுக்குரியதாக தீர்க்கப்பட்டது. ஆயினும் பூசை உருத்து முத்துச்சாமி ஐயரின் இரண்டு பெண்களுக்கும் உரியது என தீர்ப்பு வழங்கப்பட்டது.

செல்லம்மா, தர்மாம்பிகை அம்மா என்பது இச்சகோதரிகளின் பெயர்கள் ஆகும். செல்லம்மாவின் இரண்டாவது மகளின் மகன் சிவசாமிகுருக்கள் ஆவார்.

### 8.1.3 மணியம் சுப்பர், மாதவையர் முரண்பாடு

கேணி இருந்த பகுதியை மணியம் சுப்பர் தன் பெயரில் எழுதி எடுத்து விட்டதாக மாதவஐயர் வழக்கு தொடுத்தார். ஆனால் வழக்கு மணியம்சுப்பர் பக்கம் சார்பாக முடிந்தது. பின்னர் பின்பு இக் கேணி தூர்க்கப்பட்டு தென்புற வீதி விசாலமாக்கபட்டுள்ளது. பிறிதொருகாலத்தில் ஆழமானதும்பல படிகள் கொண்டதுமான இக்கேணி மீட்கப்படும் போது வரலாற்றை அறிய இத்தகவல் பெரிதும் உதவும்.

1980 காலப்பகுதியில் சூரன்போர் நிகழத்தொடங்கிய பின்னரே இக்கேணி முற்றாக தூர்க்கப்பட்டும் சுவர்கள் இடிக்கப்பட்டும் வீதி விசாலிக்கப்பட்டது

## 9.0 அரசமரத்தடி வைரவர் கோயில்

9.1 பெரியதம்பிரான் கோயிலடியின் வடமேற்கு புறத்தில் உள்ள அரசமரத்தை பிராமணதெரு ஏகாம்பரக்குருக்களின் தாய் மங்களம்மா 1800 களின் பிற்பகுதியில் பிள்ளை பலன் வேண்டி நாட்டினார் தினமும் நீர் ஊற்றி மரத்தை சுற்றி வந்து வழிபட்டு வந்தார் பிள்ளை பலனும் கை கூடியது.

9.1.1 ஆலமரம் பெரிதாய் வளர்ந்து கொண்டிருந்தது. முத்துச்சாமி குருக்களின் மைத்துனன் மாதவையார்(மகாதேவ ஐயர்)காசிக்குப் போனபோது அங்கிருந்து வைரவசூலமொன்றை கொண்டு வந்து 1920 களின் முன்பின்னான ஆண்டுகளில் அரச மரத்தடியில் ஸ்தாபித்தார்(தகவல்- வைத்திய நாதக்குருக்கள்(80)தெருமூடி மடத்தடி-- 1994)




9.1.2 இந்த அரசமரத்துக்குக் கீழே உள்ள வைரவ கோயில் எம்மவரால் உருவாக்கப்பட்டது.கார்த்திகேசு வாத்தியார்,கந்தையா ஆகியோரின் தகப்பன் வேலப்பா (வேலுப்பிள்ளை) இவரின் தகப்பன் குமரப்பர். குமரப்பரின் தகப்பன் அனுராதபுரத்தில் உள்ள காளதிவுளாவையில் வியாபாரம் செய்தகாலத்தில் 1800 களின் பிற்பகுதியில் அங்கு வைரவகோயிலொன்றை ஸ்தாபித்து வழிபட்டுவந்தார்.ஏராளமான சிங்கள மக்களும் தினசரி வந்து காளதிவுளாவை வைரவரை மிகுந்தபக்தியுடன் வழிபட்டு வந்தனர். குமரப்பரின் தகப்பன் சிங்களவர் சிலருடன் ஏற்ப்பட்ட முரண்பாட்டால் அந்தவைரவர் கோயிலில் உள்ள யந்திரத்தையும் வைரவசூலத்தையும் யாருமறியாமல் எடுத்துக் கொண்டு நடைசாரியாக தும்பளைக்குவந்து அரசமரத்தின் கீழ1800 களின் பிற்பகுதியில் கொட்டில்போட்டு ஸ்தாபித்தார். 1950 களில் வைரவ கோயிலுக்கான கட்டிடம் வேலப்பா குடும்பத்தவரால் கட்டப்பட்டது. (தகவல் - ச.கந்தசாமி வாத்தியார் (71) 2000)

9.1.4 இதனால் வேள்விக்காலத்தில் வேலப்பாகுடும்பத்தினர் முக்கியத்துவப்பட்டனர்.தெய்வம் ஏறிக்கலையாடுவார்.வேலப்பாவும்,பின்னர் கந்தையாவும் கலை ஆடுவதை நான் நேரடியாகக் கண்டுள்ளேன்.கந்தையா அவர்கள் தன்மகளின் இழப்புக்குப்பின் ஏறத்தாள 1980 களில் இருந்து கலை ஆடுவதை நிறுத்தி விட்டார்.

சிங்கள ஊரில் இருந்து கொண்டுவரப்பட்டமையினால் இதை சிங்களவைரவ கோயில் எள்றும் முற்காலத்தில் அழைத்துள்ளனர்.இங்கு வேள்வி நடைபெறும் காலத்தில் சிங்களவர்கள் 1900 த்தின் முற்பகுதிவரை தேவையான பெருள் பண்டங்களை அனுப்பி வந்துள்ளனர்.(தகவல்-வ.செல்வரத்தினம் ஆசிரியர்-1994)

9.1.5 பிராமணர்பரம்பரையினரால் அரசமரம் உருவாக்கப்பட்டு,மாதவரையால் மரத்தின் வேரடியில்சூலம் முதல் முதலில் ஸ்தாபிக்கப்பட்டதால்,எம்மவரின் வேள்விக்குப் பிறகு வரும் வெள்ளிக்கிழமையில் பிராமணர்

பொங்கிப்படைப்பது முன்னர் நடைமுறையாக இருந்துள்ளது வந்துள்ளது. (தகவல் - சுப்பிரமணிஐயர் - ஐயர் வாத்தியார்பிராமண தெரு-1994)





1- பிராமணரான ஏகாம்பரநாதக்குருக்களின் தாய் மங்களம்மா நாட்டி வளர்த்த அரசமரம்

2- மாதவையர் காசியில் இருந்து கொண்டுவந்து ஸ்தாபித்த சூலம்.

3- வேலப்பாவின் பேரன் அனுராதபுரம் காளதிவுளாவையில் இருந்து கொண்டு வந்து ஸ்தாபித்த சூலம் உள்ள் வைரவகோயில்



## தும்பளை மேற்கு



A - கனற்றை கோயில்
B - கனகற்றை வீடு
C - மாதவையர் வீடு
D - சீனி ஐயர் வீடு
E - தெய்வக் கோயில்
F - சுந்தர ஐயர் வீடு
G - சபாபதி ஐயர் வீடு
H - பொன்னம்பல ஐயர் வீடு
I - காரள ஐயர் வீடு

பின்னிணைப்பு - 1

## தும்பளை மேற்கு சைவக்குருக்கள் குடும்பங்கள்

பெரியதம்பிரான் கோயிலும், ஸ்ரீவரதவிநாயகர் ஆலயமும் அருகருகே ஒரேவளவினுள் இருந்தாலும் பெரியதம்பிரானுக்கு சைவக்குருக்களும், விநாயகருக்கு பிராமணரும் பூசகராக இருந்து வந்துள்ளனர். ஆரியவழிவந்த வழிபாட்டு முறைக்குள் அடங்காத திராவிட(Non Argamic tradition)வழிவந்த சிறுதெய்வ வழிபாட்டுக்கோயிலாக பெரியதம்பிரான் இருந்து வருவதால் இத்தெய்வங்களுக்கு பிராமணர் பூசகராக இருப்பதில்லை.

1400 காலப்பகுதியில் உருவாகக்ப்பட்ட பெரியதம்பிரான் ஆலயத்திற்கு(விபரம்-பக்22,23,24)சந்திரப்பரமானந்தர் குடியினைச் சேர்ந்த வேளாள சமுகத்தினரின் வழித்தோன்றல்கள் காலத்துக்குக் காலம் பூசகராக இருந்து வந்துள்ளனர்.மடை சிறப்பாக நடைபெறும்,கலைஆடி,வழிவெட்டலுமஇடம்பெற்றுள்ளது. **(தகவல்-அமரர்திரு.வே மதிபாலசிங்கம் (80) 2002)**

பிற்காலத்தில் தும்பளைமேற்கு பெரியதம்பிரான் கோயிலையண்டிய தென்கிழக்கு,தென்மேற்க்கு பகுதிகளில் குடியேறினர்.இதனால் 1800களில் இருந்து சைவக்குருக்களே பெரியதம்பிரான் ஆலயத்திற்குபூசகராக அமர்த்தப்பட்டனர்.


பெரியதம்பிரான் ஆலயத்திற்கு மிக அருகே தென்கிழக்காக வாழ்ந்த சைவரான கனகையர் என்பவரால் அவரின் வீட்டருகே முருகன் ஆலயமொன்று அமைக்கப்பட்டது. இது இன்றும்"**கனகற்றை**"கோயில் என்றே அழைக்கப்பட்டு வருகிறது. இக்கோயிலும், இவரது வீடும் நாலுபுறமும் உயரமான சுண்ணாம்புக்கல் மதில்களால் எல்லைப்படுத்தப்பட்டிருந்தது. தலவிருட்சமாக வில்வ மரம் (சந்தன வில்வம்) காணப்பட்டது. (தகவல் நா. **முத்துக்கிருஷ்ணன்** (74) - 2009)

கனகையர் இந்தியாவுக்குச் சென்று திருச்செந்தூரில் இருந்து வேல் கொண்டுவந்து 1800களின் பிற்பகுதியில் பிரதிஸ்டை செய்தார்.இவர் சந்நியாசிப்போக்குக் கொண்ட பக்திமானாவார்.
**(தகவல்-வே.மதிபாலசிங்கம்(80)2002)**

**(குறிப்பு:-இக்கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும வேளையில் 22.04.2009 தமிழறிவுமிக்க கலைஞர் வே.மதிபாலசிங்கம் காலமாகிவிட்டார்.)**

கனகையரின் மறைவுக்குப் பின்னர் இவரின் நினைவாக சந்நியாசி வைரவகோயிலொனறு,முருகன் கோயிலுக்குப் பக்கத்தில் உருவாக்கப்பட்டது.இதன்மூல மூர்த்தியான வைரவர் முனிவர்களின் கையில் இருக்கும் தண்டின்வடிவுடையாதாக முன்னர் காணப்பட்டது.
**(தகவல்-மு.கணேசமூர்த்திஆசிரியர்-(62) 2009)**

**சந்நியாசி வைரவர் கோயில்**





1) சந்நியாசி வைரவர்
2) திருவிளக்கு

**சந்நியாசி வைரவருக்கு கஞ்சா ரொட்டி படைக்கும் வழமையும் காணப்பட்டது. (தகவல் திரு.ச. கந்தசாமி ஆசிரியர் (82) - 2009)**




## பெரியதம்பிரான் கோயிலடி சைவக்குடும்பங்கள்




1) பெரியதம்பிரான் கோயில்
2) ஸ்ரீவரதவிநாயகர் கோயில்
3) கனகற்றை கோயில்
4) கனகற்றை வீடு
5) மாதவையர் வீடு (பிராமணர்)
6) சீனி ஐயர் வீடு (பிராமணர்)
7) காராள ஐயர் வீடு
8) தெரு
9) $V_1, V_2, V_3$ வரதவினாயகர் வீதி.
10) சின்னப்பிள்ளையார் கோயில்
11) அரசமரம்
12) வைரவ கோயில்
13) கிணறு
14) தபால் பெட்டிச் சந்தி
15) முதலி பேச்சி கோயில்

## கனகற்றை கோயிலும் வீடும்




1) முருகன்கோயில்
2) சந்நியாசிவைரவர் கோயில்
3) கிணறு
4) தலவிருட்சம் - வில்வம்
5) கோயில், வீடு இடைப்பட்ட சுவர்.
6) கதவு

கனகற்றை முருகன் கோயிலில் திருவிழாவும் நடைபெற்றது. திருவிழாக்காலத்தில் எழுந்தருளியை மயில்வாகனத்தில் வைத்து தூக்கி உட்பிரகாரத்தை வலம் வருவர்.
(தகவல்:-திரு.ச.கந்தசாமி வாத்தியார்)

கனகற்றை வீட்டுக்குக் கிழக்குப்புறமாக ஐயமுத்துக்குருக்களின் வீடு காணப்பட்டது (இதை காராள ஐயர் வீடு என அழைக்கப்படுகின்றனர்)ஐயாமுத்துக்குருக்களின் சகோதரரில் ஒருவரான சீனிஐயர் நெல்லண்டை பத்திரகாளி அம்மன் கோயில் பூசகராக இருந்துள்ளார்.இவருக்கான இருப்பிடம் இன்று "அஞ்சலியகம்"அமைந்திருக்கும் வீட்டுக்கு முன்காணியில்இருந்தது.(தகவல-அமரர் திரு.வே.மதிபாலசிங்கம)



இன்னுமொரு சகோதரரான சின்னத்தம்பி ஐயர் மாதனைக் கண்ணகை அம்மன் கோயில் பூசகராக இருந்துள்ளார். அவ்வேளை பூசகருக்கான இருப்பிடம் கண்ணகி அம்மன் கோயிலுக்கு முன்காணியில் அமைக்கப்பட்டிருந்தது.இவர் ஆங்கிலத்திலும் வல்லவர்.

ஐயாமுத்துக்குருக்களின் மூத்தமகன் சச்சிதானந்தக் குருக்கள்(1885-1942) ஆவார். இவரைத் தருமலிங்க ஐயர் என்று அழைப்பார்.சைவரான இவர் அச்சுக்கூடத்தடிப் பிராமணரான சுப்பிரமணிய சாஸ்திரிகளிடம் தமிழ் ,சமஸ்கிருதம் என்பவற்றைக் கற்றுத் தேர்ந்தவர்.ஆங்கிலத்திலும் மிக்க அறிவு கொண்டவராக இருந்தார்.

சமூக நோக்குக் கொண்ட தருமலிங்க ஐயரே 1928 அளவில் பெருவெட்டித்தெரு நாற்சந்தியில் பெரிய தபாற்பெட்டியை அமைக்கப்பாடுபட்டவர்.அக்காலத்தில் இருந்து சுற்றியுள்ள பலகிராமங்கள் கலட்டி, தச்சன் கலட்டி,மாதனை,சவனாய் பகுதிமக்களுக்கு இத்தபாற்பெட்டி மிகுந்த உபயோகமாக இருந்து வருகிறது.இந்த இடம் இன்று தபாற்பெட்டிச்சந்தி என்றே அழைக்கப்படுகிறது.

தும்பளை மேற்கு சைவக்குருக்களில் பலர் கந்த புராணத்துக்கு உரை சொல்வதில் மிகவும் பாண்டித்தியம் பெற்று இருந்தனர். இவர்களுள் தர்மலிங்க ஐயர் புராணபடிப்புகளுக்கு உரை சொல்வதில் மிகப் பிரபலியமானவராக திகழ்ந்தார்

ஐயா முத்துக்குருக்களின் இரண்டாவது மகன் காரளசிங்க ஐயர் (1892 - 1953) காராள ஐயர் என்று அழைக்கப்பட்டார் இன்றும் இவர் வாழ்ந்த வீடு காராள ஐயர் வீடு என்றே அழைக்கப்பட்டு வருகின்றது. இவ் வீட்டை பின்நாளில் திருமதி பகவதி கனேசமூர்த்தி குடும்பத்தினர் வாங்கினர்.

பெரியதம்பிரான் கோயிலுக்கு சைவரான செல்லையா குருக்கள் என்பவர் 1800 களின் பிற்பகுதியில் இருந்து நீண்ட

காலம் பூசகராகக் பணியாற்றினார். இவருக்கு பிறகு அவரின் பெறாமகனான தருமலிங்க ஐயர் பூசகராக கடமையாற்றினார்.

தும்பளை மேற்கில் வாழ்ந்த சைவர்கள் தொழில் ரீதியான வருமானத்தை பின்வரும் முறைகளில் பெற்றுக்கொண்டனர்

1) கோயில் பூசை நடாத்துதல்
2) சவக்கிரிகை நடத்துதல்
3) அந்தியேட்டி கிரிகை மடத்தில் நடத்துதல்
4) கந்தப்புராண படிப்புக்கு விளக்க உரை சொல்லுதல்

பெரியதம்பிரான் கோயிலின் இன்னொரு விசேடம் என்ன வென்றால் காசியாண்ட புராணப்படிப்பு படிக்கப்படுதலாகும். யாழ்ப்பாணக குடாநாட்டில் இருக்கும்,சுழிபுரம் அம்மன் கோயிலிலும் இங்கும் மட்டுமே காசியாண்டப் படிப்பு நடத்தப்படுகிறது.இதை இங்கு தொடங்கியவர்கள் இந்த சைவக்குருக்கள் பரம்பையினரே ஆவர்(தகவல்:-தி.சுப்பிரமணியம (65) சுப்பண்ணா2009)

ஸ்ரீவரதவினாயகருக்கு 1800களின் பிற்பகுதியில் இருந்த பிராமணர்களான முத்துச்சாமிக்குருக்களும், பின் மாதவையரும்,இறுதியாக 1922ல் இருந்து1947 வரை ஏகாம்பர ஐயரும் பூசகர்களாக இருந்துள்ளனர்.

பெரியதம்பிரான் (வீரபத்திர)கோயிலுக்கு சைவர்களான செல்லையர்,தர்மலிங்க ஐயர், பின்னர் சுந்தரஐயர் என்போர் பூசகர்களாக இருந்துள்ளனர். 1940 களில் பிள்ளையாருக்கு பிராமணரான ஏகாம்பர ஐயரும், பெரியதம்பிரானுக் சைவரான சுந்தரஐயரும் ஏககாலத்தில் பூசகர்களாக இருந்துள்ளனர். (தகவல்:-திருமதி.ச.சிவபாக்கியம்-சின்னம்மா(78)2009)


காராள ஐயர் மந்திகைக் கண்ணகி அம்மன் கோயில் பூசகராக இருந்துள்ளார்.சில ஆண்டுகள் அனுராதபுரம் கதிரேசன் கோயிலிலும் பூசகராகக்கடமை புரிந்துள்ளார். கும்பாபிசேகங்களுக்கு பிரதம குருக்களாக இவரின்அண்ணன் தருருமலிங்கக்குருக்களையும்,காராளஐயரையும் பல இடங்களில் இருந்து அழைப்பார்.



இவரின் பெண்சகோதரி மருதடி நமச்சிவாயக் குருக்களைத் திருமணம் செய்து கொண்டார்.இவர்களின் மகனே பொன்னம்பல ஐயராவார். இவர் மருதடி வைரவ கோயில் பூசகராகவும், சில ஆண்டுகளின் முன்பு வரை சவக்கிரியை, அந்தியேட்டிக் கிரியைகளை நிகழ்த்திக் கொடுக்கும புகழ்பெற்ற சைவகுருக்ககாக இருந்து வந்தது யாவரும் அறிந்ததே.

சுந்தர ஐயர், சபாபதி ஐயர் பொன்னம்பல ஐயர் ஆகியோர் தபாற்பெட்டிச் சந்தியில் இருந்து ஆரம்பமாகிச் செல்லும் அரசடி ஒழுங்கையில் தெய்வக்கோயிலின் (கருமாரி அம்மன் வடபுரவீடுகளில் வாழ்ந்தவர் ஆவார்.

**அரசடி வீதி தெய்வக்கோயில்**
**சைவக்குடும்ப வீடுகள்**



பொன்னம்பல ஐயரின் அண்ணன் நடராச ஐயர் அனுராதபுரம் கதிரேசன் கோயிலில் பூசகராகக் கடமை ஆற்றினார். 1983 கலவரத்தில் நடராச ஐயரும் மனைவியும் உயிருடன் கொழுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். (தகவல் திருமதி ச. சிவபாக்கியம் - சின்னம்மா - (77) - 2009)

**தும்பளை மேற்கில் பிராமணர், சைவர் ,வேளாளர்களான கலட்டியார், வலிகாமத்தார்** ஆகிய குழுமங்கள் ஒன்று கூடிச் சங்கமிக்கும் இடங்களாக பின்வருவன திகழ்ந்தன

1) பெரிய தம்பிரான் (வீரபத்திர) கோயில்
2) ஸ்ரீவரத விநாயகர் கோயில்
3) கனகற்றை கோயில்
4) அரச மரத்தடி வைரவ கோயில்

இந்த ஒன்று கூடல் வாழ்வில் குழும நிலைப்பட்ட பண்பாட்டுக் காரணிகளின் இணைவால் தும்பளை மேற்குக் கலட்டிப் பகுதிக்கென பிரத்தியேகமான பண்பாட்டு நிலைமை உருவாக வழிவகுத்தது. இந்தப் பண்பாட்டின் வழியான பொதுப்பண்பாட்டில் உன்னதமான பக்கங்களும், பலவீனமான பக்கங்களும் உள்ளடங்கியுள்ளன.

குறிப்பாக கல்விக்கலாச்சாரம் இந்தப்பண்பாட்டின் வழி வந்த உன்னத பேறுகளில் ஒன்றாகும். பலவீனமான பக்கங்களை இனம் கண்டு அகற்றி எதிர்கால யாத்திரையில் எம்மைச் சீரமைத்து, உலகம் போற்றும் உன்னத சமூகமாக எம்மை ஆக்கிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**கனவுகள் மெய்ப்படும்**
**வானம் நம் வசப்படும்**



பின்னிணைப்பு - 2



**பிராமண தெருவின்**
**புழுதியில் குளித்தெழுந்த நட்பு**
**அமரர்**
**நடராசா கணேஸ்வரன்**
**(1955 - 2008)**

மைச்சான் எனக்கு நினைவறிந்த நாள் முதலாய் நின் தேகம் சரிந்த பிறகும் அழியா நட்புடன் என்னுள் உறைந்திருப்பவன் நீ.

நின் சிறுவயது முதலாய் கொடிய விதி உன்னைத் துரத்தித்துரத்தி அடித்துக் கொன்றுவிட்டதே. உனது அறிவுக்கும், ஆளுமைக்கும் எங்கோ, எப்படியோ, உயர்நிலையில் வாழ வேண்டியவன் நீ !

எல்லாவற்றிலும் கொடிது இளமையில் வறுமை. வறுமையின் கூரிய நகங்கள் கொண்ட கோரக்கைகளால் நசுக்கப்பட்டாய், பிழிந்தெடுக்கப்பட்டாய். கடவுள் மீது நீ கொண்ட நம்பிக்கை அளப்பரியது. உன் வேண்டுதல்களை யெல்லாம் நிராகரித்த அந்த கடவுள் மீது கடும்கோபம் கொண்டுள்ளேன்.

"கடவுளே நீ கல்லாய் அமர்ந்து விட்டது ஏன்........?
நீ இருக்கிறாயோ இறந்து விட்டாயோ.....?"

உன்னை வதைத்து உன் குடும்பத்தை நிமிர வைத்தாய், மறுமலர்ச்சி அடைய வைத்தாய். உன் தனிப்பட்ட வாழ்வில் தோல்விகளையே பரிசாகப் பெற்றாய். சளைக்கவில்லை நீ. போராட்டம் விதியுடன் ஓயாத நெடும் போர்.

மச்சான் நீ பாட வாய் திறந்து குரலெடுத்தால் கிளியும், குயிலும் வாய் மூடும். இள வயதினிலே சரளமான உன் ஆங்கில, சிங்கள மொழிப் பாண்டித்தியம் நண்பர் எமக்கெல்லாம் கஷ்டப்பட்டும் இன்றும் வர மறுக்கின்றது.

உன்னைச்சுற்றி எப்போதும் ஒரு நண்பர் கூட்டம் உடனிருக்கும். பாடியும், சிரிப்பூட்டியும், அவரவர்

மனக்காயங்களிற்கு ஒத்தடம் கொடுத்தும், கற்பித்தும் பலரை ஆற்றுப்படுத்தி ஆளாக்கினாய். உன்னில் ஊற்றெடுத்த அன்பெனும் போராற்றில் குளித்தவர்களில் நான் முதல்வனென்பேன்.

உன் வீட்டில் கள்ளனும் பொலீசும் விளையாடியும, ராட்டினம் ஆடியும், வேப்பங்கிளையில் நின் தந்தை கட்டித்தந்த பெரும்பலகை ஊஞ்சலில் ஆடி மகிழ்ந்தும், பிராமணதெரு நண்பர்களின்களின் கிரிக்கெட் குழுவிற்கு அப்பலோ விளையாட்டுக்கழகம் என 1969ல் வரலாற்றுணர்வுடன் பெயர் சூட்டியும் எம்மை வழிநடத்தியவன் நீ .

1976ம் ஆண்டு காலப்பகுதியில் தும்பளை மேற்கு கலட்டியூரின் சனசமூக நிலைய பொறுப்பை இளைஞர்களாம் நாங்கள் ஏற்ற போது நீயே செயலாளனாய் வருந்தி உழைத்தாய். திரு. ந. இரகுநாதன் (சிரேஷ்ட போதனாசிரியர் வவுனியா) பொருளாளன். நான் மாணவர் மன்றத்தலைவர், அமரர் ஏகாம்பரம் சிவானந்தன் எம் கூட நின்று உழைத்ததும் மறக்கமுடியாத நிகழ்வுகள்.


கனகற்றை கோயில் பாழ்கிணற்றை படுசிரமப் பட்டு பாவனைக்கு உகந்ததாக்கினோம். வாசிகசாலையில் ஆண்டு விழாக்களும், அறிவுசார் ஒன்று கூடல்களும், குயிலோசை என்ற கையெழுத்துச் சஞ்சிகையை பல வருடங்கள் தொடர்ந்து நடத்தியதும், உதிரிகளாய் இருந்த எம்மூர் விளையாட்டுக் கழகங்களை நாவலர் விளையாட்டுக்கழகம் என்ற பெயரில் ஒன்றாக்கி வலுவாகத்திகழவும் எம்முடன் கைகோர்த்து நின்ற காலங்கள் நிழற்படமாய் நெஞ்சில் ஓடுதடா.

அடிக்கடி நின் நினைவு வரும் வேளையில் என்மனம் படும் பாட்டை உனையன்றி வேறார் அறிவார். நண்பன் என் இதயத்தில் நீ குந்தி இருக்க என்றென்றும் ஓரிடம் நிலைத்திருக்கும். வேறென்ன மச்சான்.

**"உனக்கு மட்டும் கேட்கும் - என்**
**உயிர் உருகும் சத்தம்"**

நின் ஆத்மா சாந்தியடையட்டும்.

துயர் சுமந்த நெஞ்சுடன்
உன் மச்சான்
பா. இரகுவரன்.



கலாநிதி யந்திரசாலை
PRESS
1934 - 2009
1932 - 2009
1902 - 1974
1932 - 1991
1931 - 1999